ஸ்ரீ:
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

# திருக்கோட்டியூர் நம்பி

## திருநாள் பாட்டு

சந்ததமும் புவி எங்கு மிகுந்து களித்து வளர்ந்திடு நாள்
   தண்மை பெரும் செல்வ நம்பி குலம் பெரிதா உயர்ந்திடு நாள்
கந்தருவாதிகள் அம்பர மீது களித்திசை பாடிடு நாள்
   கஞ்ச மலர்த் திருமாமகள் செல்வம் களித்து வளர்ந்திடு நாள்
எந்தை யதித் தலைவன் திருவுள்ளமதில் இசைந்திடு நாள்
   எண்டிசையும் சரமப் பொருளின் ஈர்மை இலங்கி விளங்கிடு நாள்
நந்துலவும் வயல் வாவி சிறந்த நலம் திகழ் தென்கோட்டி நம்பி
   உதித்த வைகாசி ரோகிணி நாள் மிகு நன்னாளே

---